வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின்(பொ) செயல்முறைகள்

ந.க.எண்.3898/ஆ2/2024 நாள்: 18.06.2025

பொருள்: பள்ளிக் கல்வி–வேலூர் மாவட்டம்–2024–2025ஆம் கல்வி ஆண்டு–கல்வி உதவித் தொகை–ப்ரீமெட்ரிக் (Prematric) கல்வி உதவித் தொகை–eKyc Unverified மற்றும் NPCI Inactive மாணவர்கள் பெயர் பட்டியல்– மாணவர்கள் வங்கி கணக்குடன் ஆதார் சீடிங் செய்ய தெரிவித்தல்– மாணவர்களுக்கு eKyc Verification செய்ய தெரிவித்தல்– சார்பு.

பார்வை:
1. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள்: 27.09.2024, 29.10.2024, 18.11.2024, 04.12.2024, 02.05.2025, 07.04.2025
2. மாநில பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் இணைய வழி கூட்டம் நாள்: 13.06.2025

------

வேலூர் மாவட்டம், அரசு பள்ளிகளில் பயிலும் கல்வி உதவித் தொகை, பெற தகுதியுள்ள மாணாவர்களில் 556 மாணவர்களின் வங்கிக் கணக்கில் உதவி விடுவிக்க இயலாமல் NPCI Inactive நிலையில் உள்ளது மற்றும் 247 மாணவர்களுக்கு eKyc Verification மேற்கொள்ளாமல் உள்ளது.

எனவே, மாணவர்களுக்கு உரிய நேரத்தில் கல்வி உதவித் தொகை சென்றடையும் வண்ணம் அந்தந்த பள்ளிகளில் பொறுப்பாசிரியர் ஒருவரை நியமனம் செய்து, மாணவர்கள் வங்கி கணக்குடன் ஆதார் சீடிங் செய்யவும், மேலும், ஆதார் அட்டை புதுப்பிக்காமல் இருக்கும் மாணவர்களை ஆதார் புதுப்பிக்க (Biometric Updation) அறிவுறுத்த வேண்டும் மற்றும் eKyc Unverified மாணாவர்களுக்கு, eKyc Verification மேற்கொள்ள TN Generic செயலி மூலம் மேற்கொள்ளவும். இப்பொருள் சார்ந்து தனிகவனம் அளித்து மேற்குறிப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மாணவர்களின் சரியான விவரங்களை (ஆதார் சீடிங் செய்யப்பட்ட வங்கிக் கணக்கு விவரங்கள் உட்பட) EMIS வலைதளத்தில் சரியான பதிவுகள் மேற்கொண்டு, 21.06.2025ஆம் தேதிக்குள் இப்பணிகளை முடித்திட சார்ந்த பள்ளி தலைமையாசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: மாணவர்களின் பெயர் பட்டியல்
(NPCI Inactive–556 & eKyc Unverified–247)

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ)
வேலூர்.

பெறுநர்
சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்
மாவட்டக் கல்வி அலுவலர்
(இடைநிலைக் கல்வி)
வேலூர்.
(தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பப்படுகிறது)

Scanned with OKEN Scanner